விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆவணி - 2 புதன் 18.08.2021 மலர் - 2, இதழ் - 134

# அறநிலையத்துறை செய்வது சரியா




விஜயபாரதம்

சென்னை, மயிலாப்பூர் ஆதிகேசவ பெருமாள் கோவிலின் முன்னாள் அறங்காவலர்கள் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டதாக, தொடர்ந்து புகார்கள் எழுந்தது. இதனை அடுத்து, அந்த கோவில், ஹிந்து சமய அறநிலையத்துறை வசம் கொண்டு வரப்பட்டதாக அறநிலையத்துறை சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அதற்காக அளிக்கப்பட்ட காரணங்களில் 'சட்ட விதிகளுக்கு முரணாக கடந்த, 10 ஆண்டுகளுக்கு மேலாக, அறங்காவலர் குழு தலைவர் பதவி வகித்தது, கோவிலின் சொத்துப் பதிவேட்டின்படி முறையாக பராமரிக்கவில்லை, சொத்துக்களை பாதுகாப்பதில் அக்கறை காட்டவில்லை, கோவில் இடங்களுக்கு நியாயமான வாடகை நிர்ணயம் செய்யவில்லை, இதனால், கோவிலுக்கு வருவாய் இழப்பு' என்பது சில.

தவறுகள் இருந்தால், அது நிரூபிக்கப்பட்டால் தவறு செய்தவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம், புதிய அறங்காவலர் குழுவை நியமிக்க உதவலாம். அதனை விடுத்து கோவிலை வலுக்கட்டாயமாக அரசு கையகப்படுத்துவது முறையா? என பக்தர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது போன்ற முறைகேடுகள், அனேகமாக ஹிந்து அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து கோவில்களிலும் நடைபெற்றுக் கொண்டுதானே உள்ளது. மேலும், கபாலீஸ்வரர் கோவில் உட்பட சுமார் 60 கோவில்களில் செயல் அலுவலர் நியமன உத்தரவு இன்றி அரசு இயக்குகிறதே, 1951, 1965ம் ஆண்டுகளில் உச்ச நீதிமன்றம், ஸ்ரீரங்கம், பழனி, திருவாரூர் உட்பட 45 கோவில்களை அரசு நிர்வகிக்க போட்ட அரசாணையை ரத்து செய்துள்ளது. எனினும், இன்றுவரை அரசே இக்கோவில்களை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து வைத்துள்ளதே?

கோவில் பணத்தை கோவிலுக்கு செலவழிக்க வேண்டும் என்ற நீதிமன்ற உத்தரவை மதிக்காமல் அதனை கொரோனா நிவாரணப் பணிகள், அதிகாரிகளுக்கு கார், டீசல் என அரசே முறைகேடாக செலவழித்துள்ளதே? கோவில்கள் அதன் சொத்துக்களை பாதுகாக்காமல் அவற்றில் திருட்டு, ஊழல், முறைகேடுகள் நடக்கவிட்டுள்ளதே, ஒருவேளை பூஜைகூட

இல்லாத கோவில்கள் இன்னமும் இருக்கின்றனவே, ஹிந்து அற நிலையத்துறையில் மாற்று மதத்தினருக்கு வேலை, ஹிந்துக்கள் உணர்வுகளை மதிக்காமல் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆணை, கோவில்களின் தங்கத்தை உருக்குவது, வடபழனி கோவில் நிலத்தை மாற்று மதத்தினருக்கு தாரை வார்ப்பது என அரசே தவறான முன்னுதாரணமாக செயல்படலாமா?

பல ஆண்டுகளாக இது போன்ற தவறுகளை தொடர்ந்து செய்து வரும் திராவிட அரசுகள், இதற்கெல்லாம் என்ன பதில் சொல்லப்போகின்றன?

மசூதிகளின் சொத்தை வக்பு வாரியம் நிர்வகிக்கிறது, சர்ச்சுகளின் சொத்தை மறைமாவட்ட நிர்வாகம் கவனித்துக் கொள்கிறது. அதுபோல, ஹிந்து கோவில்களை ஹிந்து அமைப்பினரிடம் ஒப்படைத்துவிட்டு தமிழக அரசு தனது மாநில நிர்வாகத்தில் மட்டும் கவனம் செலுத்தலாமே? சிந்திப்பார்களா?

மதிமுகன்

# ரயில்வே மிஷன் 160 கி.மீ.



விஜயபாரதம்

இந்திய ரயில்வே, தனது ரயில்களை ஒரு மணி நேரத்திற்கு 160 கி.மீ என்ற வேகத்தில் இயக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. அந்த வேகத்தில் செல்லும்போது, அதிர்வுகளைக் கட்டுப்படுத்தவும், சுமுகமான பயணம் அமையவும் இணைப்புகள் இல்லாத கான்ட் அவுட் முறையில் தண்டவாலங்கள் அமைப்பது அவசியம். இதற்காக, உத்தரபிரதேசம் பிரயாக்ராஜ் பிரிவில் உள்ள சஸ்னி ரயில் நிலையத்தில் இதற்கான பூர்வாங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதிர்வுகளைக் கட்டுப்படுத்தவும், சுமுகமான பயணம் அமையவும் இணைப்புகள் இல்லாத 'கான்ட் அவுட்' முறையில் தண்டவாளங்கள் அமைப்பது அவசியம். இம்முறையில், டெல்லி கவுஹாத்தி, டெல்லி ஹவுரா, டெல்லி சென்னை, சென்னை மும்பை, சென்னை ஹவுரா, ஹவுரா மும்பை மற்றும் டெல்லி மும்பை ஆகிய ஏழு உயர் அடர்த்தி கொண்ட ரயில் பாதைகள் இதற்காக மாற்றி அமைக்கப்படும். இதனால் அடுத்த சில ஆண்டுகளில் ரயில்கள் மணிக்கு 160 கி.மீ வேகத்தில் செல்வது சாத்தியப்படும். சரக்கு சேவைக்காக பிரத்யேக சரக்கு வழித்தட திட்டமும் ஒருபுறம் வேகமாக நடைபெற்று வருகிறது.

# ஸ்டாலினுக்கு சுப்ரமணிய சாமி எச்சரிக்கை




சென்னை, மயிலாப்பூர் கபாலீஸ்வரர்; திருச்சி, சமயபுரம் மாரியம்மன் உள்ளிட்ட 58 கோவில்களில் அவர்கள் நியமனம் செய்யப்பட்டு உள்ளனர். இதை குறித்து பேசிய பா.ஜ.க மூத்த தலைவர் சுப்பிரமணியசாமி, 'இந்திய அரசியல் சட்டத்தின்படி தான், ஹிந்து அறநிலைய சட்டம் 1959 இயற்றப்பட்டது. அந்த சட்டத்தின் பிரிவு, 55ன் படி, அறநிலையத் துறை கோவில்களில் பூஜாரி, அர்ச்சகர், ஓதுவார் உள்ளிட்டோரை நியமிக்க, கோவிலை நிர்வகிக்க அறங்காவலருக்குத்தான் அதிகாரம் உள்ளது. சட்டம் அப்படி இருக்கையில், முதல்வர் ஸ்டாலினுக்கு யார் அதிகாரம் கொடுத்தது? இதேபோல, சிதம்பரம் நடராஜர் கோவிலில், தீக்ஷிதர்களின் நிர்வாக உரிமையை அரசு பறித்தது. அதற்கு எதிராக, நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன். நடராஜர் கோவிலை தீக்ஷிதர்களே நிர்வகிக்கலாம் என நீதிபதிகள் உத்தரவிட்டனர். இப்போதும் அறங்காவலர் உரிமையில் அரசு தலையிட்டுள்ளது. இது தவறானது. முதல் கட்டமாக, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பேன். தேவையானால், உச்ச நீதிமன்றம் வரையும் செல்வேன். எனவே, இந்த உத்தரவை உடனடியாக ஸ்டாலின் வாபஸ் பெற வேண்டும். இல்லையெனில், அதன் விளைவுகளை சந்திக்க வேண்டும்' என கூறியுள்ளார்.

# ராணுவத்திற்கு காதி பொருட்கள்

சுதேசி தயாரிப்புகளை பயன்படுத்த உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டது. இதையடுத்து காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம் (KVIC) இந்தோ திபெத் எல்லைக் காவல் படை, பி.எஸ்.எப், சி.எஸ்.ஐ.எப், எஸ்.எஸ்.பி உள்ளிட்ட துணை ராணுவப் படைகளிடம் இருந்து ரூ. 10 கோடி மதிப்புள்ள 1.91 லட்சம் காதி பருத்தி விரிப்புகளை சப்ளை செய்ய ஆணை பெற்றுள்ளது. இந்த பருத்தி விரிப்புகள் 1.98 மீட்டர் நீளம் 1.07 மீட்டர் அகலத்துடன் நீல நிறத்தில் இருக்கும். உத்தரபிரதேசம், ஹரியானா, ராஜஸ்தான், பஞ்சாபின் காதி நிறுவனங்களால் தயாரிக்கப்பட உள்ளது. கே.வி.ஐ.சி தலைவர் வினய் குமார் சக்சேனா, 'உள்துறையின் இந்த உத்தரவு காதியையும் அதன் உயர்தரத்தினையும் படையினர் மத்தியில் பிரபலப்படுத்தும்' என கூறினார். ஏற்கனவே, காதி ஆணையம் ராணுவத்தினர் உணவு பயன்பாட்டிற்கு கடுகு எண்ணெயை அதிக அளவில் வழங்கி வருகிறது.



விஜயபாரதம்

# மாரியப்பனுடன் பேசிய பிரதமர்



விஜயபாரதம்

டோக்கியோ பாராலிம்பிக் போட்டி வரும் 25ம் தேதி தொடங்கி அடுத்த மாதம் செப்டம்பர் 6ம் தேதி வரை நடைபெறுகிறது. இதில் பாரதத்தின் சார்பில், 9 விளையாட்டு போட்டிகளில் இதுவரை இல்லாத அளவிற்கு 54 பேர் பங்கேற்கின்றனர். பாராலிம்பிக் குழுவினருடன் பிரதமர் மோடி காணொலி வாயிலாக கலந்துரையாடுகிறார். அவ்வகையில், பெங்களூருவில் பயிற்சி பெற்று வரும் தமிழக தடகள வீரர் மாரியப்பனுடன் பிரதமர் மோடி காணொலி வாயிலாக கலந்துரையாடினார். சேலத்தில் இருந்து மாரியப்பன் குடும்பத்தினரும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். மாரியப்பனுக்கு என்ன உணவு பிடிக்கும் என பிரதமர் கேட்டதற்கு, 'நாட்டுக்கோழி சூப் மிகவும் பிடிக்கும்' என அவரது தாயார் பதில் அளித்தார். முன்னதாக, டோக்கியோ பாராலிம்பிக்கில் பதக்கம் வெல்லுபவர்களுக்கு இந்த ஆண்டு தேசிய விளையாட்டு விருதுகள் பரிசளிக்கப்படும். டோக்கியோ ஒலிம்பிக்கில் பாரத அணி சிறப்பாக செயல்பட்டது போல, வரவிருக்கும் பாராலிம்பிக்கிலும் சிறப்பாக செயல்படும் என்று எதிர்பார்க்கிறோம் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் அனுராக் தாக்கூர் தெரிவித்திருந்தார்.

# ஆப்கானியர்களுக்கு அடைக்கலம் மறுப்பு




விஜயபாரதம்

ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறும் மக்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வெளியேறுவோர் எண்ணிக்கை 80 ஆயிரத்திற்கும் அதிகமாக இருக்கலாம் என நிபுணர்கள் கருதுகின்றனர். அவர்களுக்கு அடைக்கலம் தர, கஜகஸ்தான், தஜிகிஸ்தான், கத்தார், உஸ்பெகிஸ்தான், வங்க தேசம் உள்ளிட்ட முஸ்லிம் நாடுகளிடம் அமெரிக்கா கோரிக்கை வைத்து வருகிறது. எனினும் இந்த நாடுகள் அவர்களை அகதிகளாக ஏற்க மறுத்து வருகின்றன. பெயருக்கு ஒருசிலரை மட்டும் தேர்ந்தெடுத்து அடைக்கலம் தருகின்றன. ஏற்கனவே ரோஹிங்கியாக்களால் பல்வேறு இன்னல்களை நாங்கள் சந்திக்கிறோம் எனவே எங்களால் முடியாது என வங்கதேசம் கை விரித்துவிட்டது. இதனை வங்கதேச வெளியுறவுத்துறை அமைச்சர் ஏ.கே.அப்துல் மோமென் யு.என்.பி செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் உறுதி செய்தார்.

முஸ்லிம்களின் ஷரியா சட்டப்படி ஆட்சி செய்வோம் என தலிபான்கள்கூறுகின்றனர். அந்த முஸ்லிம் ரீதியிலான ஆட்சியை அங்குள்ள முஸ்லிம்களே ஏற்காமல் பயந்து நாட்டைவிட்டு ஓடுகின்றனர். வெளியேறும் அந்த முஸ்லிம்களுக்கு சக முஸ்லிம் நாடுகளே ஆதரவளிக்க மறுக்கின்றன. இது ஏன்? என இணையதளவாசிகள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

# என்.டி.பி.சி. புதிய முயற்சி



விஜயபாரதம்

மின்சக்தி அமைச்சகத்தின் கீழ் உள்ள பாரதத்தின் மிகப்பெரிய ஒருங்கிணைந்த மின் உற்பத்தி நிறுவனம் என்.டி.பி.சி. நிலக்கரி மின் உற்பத்தி நிறுவனமாக மட்டுமே அறியப்பட்ட இந்த நிறுவனம் ஹைட்ரஜன் பொருளாதாரத்திற்கு பாரதத்தை விரைவில் மாற்றும் முயற்சியில் மிக முக்கிய பங்கு வகிக்க உள்ளது. என்.டி.பி.சி, சிட்டி கேஸ் டிஸ்ட்ரிபியூஷன் (சி.ஜி.டி) நிறுவனத்துடன் இணைந்து இயற்கை எரிவாயுவுடன் ஹைட்ரஜனை கலப்பது, எரிவாயு டிகார்பனைசிங் குறித்த ஒரு முன்னோடி திட்டத்தை தொடங்கியுள்ளது. மேலும், ஆந்திர மாநிலம், ராமகுண்டத்தில் பசுமை மெத்தனால் உற்பத்தி குறித்த இந்த நிறுவன ஆய்வுகள் நிறைவடைந்துள்ளது, நிறுவனம் விரைவில் இதில் இறுதி முதலீட்டு முடிவை எடுக்கும். லடாக்கில் உள்ள லே பகுதியில் பசுமை ஹைட்ரஜன் எரிபொருள் நிலையம் மற்றும் ஹைட்ரஜன் செல் பேருந்துகளை வாங்குவது, இயக்குவது குறித்தும் என்.டி.பி.சி டெண்டர் விட்டுள்ளது.

# செல்போன் சர்வீஸ் பயிற்சி

சென்னை, கிண்டியில் உள்ள மத்திய அரசின் எம்.எஸ்.எம்.இ தொழில்நுட்ப மேம்பாட்டு மையம் சார்பில், அலைபேசி பழுது நீக்கப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆகஸ்ட் 27 முதல் 29ம் தேதி வரை, காலை 10 மணி முதல் மாலை 5.30 மணி வரை இப்பயிற்சி நடைபெறும். பயிற்சிக் கட்டணம் ரூ. 6 ஆயிரம். இதில் சேர குறைந்தபட்சம் 10ம் வகுப்பு படித்திருக்க வேண்டும். குறைந்தபட்ச வயது வரம்பு 18. அலைபேசி பழுது நீக்கத் தொழிலில் ஈடுபட உள்ளவர்கள், சுயதொழில் செய்பவர்கள், மாணவர்கள், பணி ஓய்வு பெற்றவர்கள் உள்ளிட்டோரும் இப்பயிற்சியை பெறலாம். பயிற்சியின் முடிவில் அரசு சான்றிதழ் வழங்கப்படும். கூடுதல் தகவல்களுக்கு 98410 99911, 91595 87689, 94440 34246 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜயபாரதம்



# தூதரக ஊழியர்கள் நாடு திரும்பினர்



விஜயபாரதம்

பாரத தூதரக அதிகாரிகள், ஊழியர்கள், தூதர்கள் என 120 பேருடன் விமானப்படையின் சி 17 என்ற சிறப்பு விமானம் குஜராத்தின் ஜாம்நகருக்கு வந்தடைந்தது. இது குறித்து கருத்துத் தெரிவித்த மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ் ஜெய்சங்கர், 'ஆப்கன் நிலைமையை கண்காணித்து வருகிறோம். அங்குள்ள பாரத தேசத்தவர், குறிப்பாக ஹிந்து, சீக்கிய சமூகங்களைச் சேர்ந்தவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக அமெரிக்க பிரதிநிதி ஆன்டனி பிளிங்கனுடன் தொலைபேசியில் பேசியுள்ளேன்' என்றார். பஞ்சாப் முதல்வர் கேப்டன் அமரீந்தர் சிங், மத்திய மந்திரி ஹர்தீப் சிங் பூரிக்கு அனுப்பிய ஒரு டுவிட்டர் பதிவில், 'காபூலில் உள்ள சீக்கிய, ஹிந்து சமூகத் தலைவர்களுடன் நாங்கள் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறோம். அவர்களின் நலனில் எங்களுக்கு அக்கறை உள்ளது. அவர்கள் பற்றிய தகவல்களும் எங்களிடம் உள்ளன' என கூறி மேலும் தகவல்களுக்காக வெளியுறவுத்துறையின் சிறப்பு ஆப்கானிஸ்தான் பிரிவின் அலைபேசி எண் (+919717785379), மின்னஞ்சல் முகவரி (MEAHelpdeskIndia@gmail.com) ஆகியவற்றையும் வழங்கியுள்ளார்.

# புத்தக வெளியீடு

சென்னையில் தக்ஷ பாரதி (வித்யாபாரதியின் திறன் வளர்ச்சித் துறை) மற்றும் விஜயபாரதம் பிரசுரம் சார்பாக, விசாகா ஹரி, ரங்க ஹரி எழுதிய Harikatha an Introduction text book மற்றும் பாரதியப் பெண்மணிகள் புத்தகங்கள் வெளியீட்டு விழா நடைபெற்றது. நல்லி குப்புசாமி செட்டி தலைமை வகிக்க, அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் கலாநிதி புத்தகங்களை வெளியிட்டார். சக்ரவர்த்தி, ஊடகவியலாளர் கோதை ஜோதிலட்சுமி ஆகியோர் நூல்களைப் பெற்றுக் கொண்டனர்.

விஜயபாரதம்



# பா.ஜ.க. தொண்டர் கைது

மேற்கு வங்கத்தில், பாரதத்தின் 75 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, நாட்டிற்கும் சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு மரியாதை செலுத்தும் விதமாக ‘யுவ சங்கல்ப்’ என்ற யாத்திரையை, பா.ஜ.கவின் யுவ மோர்ச்சா பிரிவுத் தொண்டர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். இதில் 75 யுவ மோர்ச்சா தலைவர்கள் தலைமையில் 75 கி.மீ பேரணியை 75 இடங்களில் தொடங்கி நடத்திட முடிவு செய்யப்பட்டது.

**எம்.எல்.ஏ கைது:**

இதற்காக புறப்பட்ட சிலிகுரி பா.ஜ.க சட்டமன்ற உறுப்பினர் சங்கர் கோஷ் உட்பட 30க்கும் மேற்பட்ட பா.ஜ.கவினரை மேற்கு வங்க காவல்துறையினர் அவர்களது கட்சி அலுவலகத்தில் கைது செய்தனர். இந்த பேரணிக்கு அனுமதி பெறப்படவில்லை என்று காவல்துறை தெரிவித்தது. இதனால், அங்கு தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

**நாராயணி சேனாவினர் கைது:**

மற்றொரு சம்பவமாக, பா.ஜ.க எம்.பி.யும், சிறுபான்மையினர் விவகார அமைச்சகத்தில் மத்திய இணை அமைச்சருமான ஜான் பர்லாவை வரவேற்க பாக்தோக்ரா விமான நிலையத்திற்கு வந்த நாராயணி சேனா தொண்டர்கள் 35 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

**ராஜூ பிஸ்தா கருத்து:**

டார்ஜிலிங்கைச் சேர்ந்த பா.ஜ.க எம்.பியும், தேசிய யுவ மோர்ச்சா பொதுச்செயலாளருமான ராஜூ பிஸ்தா, ‘தேசத்திற்கும் தேசத்தலைவர்களை மரியாதை செய்யவும் நடத்தப்பட்ட இந்த யாத்திரையை தடுத்ததன் மூலமாக, மேற்கு வங்க அரசும் மாநில காவல்துறையும் தேச விரோதிகள் என்பதை வெளிப்படுத்தியுள்ளனர். சமீபத்தில் மமதா அறிவித்த ‘கேலா ஹோபா’ நிகழ்ச்சியில் எவ்வித அனுமதியும் இன்றி ஆயிரத்துக்கும் மேற்பட்ட திருணமூல் கட்சித் தொண்டர்கள் ஒன்று கூடினர். அதனை காவல்துரையும் அரசும் கண்டுகொள்ளவில்லை. ஆனால், தேசத்திற்கு மரியாதை செய்வதை அவர்கல் தடுக்கின்றனர்’ என்று குறிப்பிட்டார்.



# ஏசுவுடன் ஜகன் மோகன் ரெட்டி ஒப்பீடு



விஜயபாரதம்

ஆந்திர பிரதேச முதல்வர் ஒய்.எஸ் ஜெகன் மோகன் ரெட்டியை, 'மனிதகுலத்தின் மீட்பர். ஏசு கிறிஸ்துவைபோல, அவரும் கடவுளின் மகன்' என்று கூறினார் பி.கண்ணாவரம் சட்டமன்ற உறுப்பினரான கொண்டேட்டி சிட்டிபாபு. இது, ஆந்திராவில் சர்ச்சையை கிளப்பியுள்ளது. மேலும், 'கல்வி முறையில் புரட்சிகர மாற்றங்கள் ஏற்படுத்தினார். வீட்டு வசதி திட்டம் கொண்டுவந்தார், அவரது திட்டங்கள் சமூகத்தின் தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு ஒரு வரப்பிரசாதம்' என புகழாரம் சூட்டியுள்ளார். முன்னதாக, இரு தினங்களுக்கு முன், ஒய்.எஸ்.ஆர்., காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மதுசூதன் ரெட்டி, முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டிக்கு ரூ. 2 கோடி செலவில் கோவில் கட்டி உள்ளார் என்பதும், கிறிஸ்தவரான ஜெகன் மோகன் ரெட்டி ஆந்திர மாநில முதல்வராக பதவி ஏற்றது முதல், கிறிஸ்தவர்களுக்கான சலுகைகள், அரசு சார்பில் அவர்களுக்காக விஷேஷ பரிசுகள், பட்டியலினத்தவரை கிறிஸ்தவர்களாக்கும் முயற்சி, கட்டாய மதமாற்றம், ஹிந்து விரோத நடவடிக்கைகள் என பல குற்றச்சாட்டுக்கு ஆளாகி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஆப்கன் குறித்த ஐ.நா சிறப்பு கூட்டம்




விஜயபாரதம்

ஐ.நா பாதுகாப்பு சபையின் தலைவராக உள்ள பாரதத்தின் தலைமையில் ஆப்கானிஸ்தன் நிலவரம் குறித்த அவசர கூட்டம் நடைபெற்றது. அதில், பேசிய பாரதத்தின் ஐ.நாவுக்கான நிரந்தர பிரதிநிதி டி.எஸ் திருமூர்த்தி 'ஆப்கானிஸ்தானின் அண்டை நாடாக, அதன் மக்களின் நண்பராக, தற்போது அங்கு நிலவும் நிலை பாரதத்திற்கு மிகுந்த கவலையளிக்கிறது. ஆப்கனில் உள்ள ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என அனைவரும் தொடர்ந்து பயத்தில் வாழ்கின்றனர். எதிர்காலம் நிச்சயமற்றதாக அவர்கள் உணர்கின்றனர். கௌரவத்துடன் வாழ முடியுமா என கவலை கொண்டுள்ளனர். அடிப்படை உரிமைகள் மீறல்கள் அதிகரித்து வருவது கவலைக்குரியது. பல விடை தெரியாத கேள்விகள் உள்ளன. நிலைமை விரைவில் சீராகும் என்று நம்புகிறோம். ஆப்கானிஸ்தான் சமூகத்தின் அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கிய பகிர்வு நல்லது. ஆப்கனில் பெண்களின் குரல்கள், குழந்தைகளின் அபிலாஷைகள், சிறுபான்மையினரின் உரிமைகள் அனைத்தும் மதிக்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் ஆப்கானிஸ்தான் போதுமான ரத்தக் களரியைக் கண்டுள்ளது. அது தொடரக்கூடாது. ஆப்கன் மக்களுக்காக சர்வதேச சமூகம் ஒன்றுபட வேண்டும். ஆப்கானிஸ்தானில் இருந்து மற்ற எந்த நாடுகளுக்கும் பயங்கரவாத அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள் இருக்காது என்பதையும் அனைத்து வித பயங்கரவாதங்களும் தடுக்கப்படும் என்பதையும் தலிபான்கள் உறுதிப்படுத்த வேண்டும்' என தெரிவித்தார்.

# ஆப்கனில் முடிவடைந்த யூத வரலாறு



விஜயபாரதம்

தலிபான் பயங்கரவாதிகளின் தாக்கு தலுக்கு பயந்து, ஆப்கானிஸ்தானில் வழ்ந்த கடைசி யூதரான சபுலோன் சிமாண்டோவ் ஆப்கனை விட்டு வெளியேறினார். காபூலில் யூதர்களின் வழிபாட்டுத் தலமான ஜெப ஆலயத்தை அவர் நாற்பது வருடங்களுக்கு மேல் கவனித்து வந்தவர். அது தற்போது நிரந்தரமாக மூடப்பட்டுவிட்டது. ஆப்கனில் யூதர்களின் வரலாறு சுமார் 2,000 ஆண்டுகள் பழமையானது. ஹெராட் நகரம் ஒரு காலத்தில் ஆயிரக்கணகான யூதர்களின் வாழ்விடமாக இருந்தது. முஸ்லிம் பயங்கரவாதிகளால் அங்கு பலர் கொல்லப்பட்டனர், சிலர் நாட்டை விட்டு வெளியேறினர். தற்போது சபுலோன் சிமாண்டோவ் வெளியேற்றத்தால் ஆப்கனில் யூத வரலாற்றில் ஒரு அத்தியாயம் முடிவுக்கு வருகிறது.

# பாகிஸ்தானில் ஆப்கன் கோஷங்கள்

பாகிஸ்தானில் பயிலும் ஆப்கானிஸ்தானை சேர்ந்த மாணவர்கள், ஆப்கனை தலிபான்கள் கைப்பற்றியதும் ஆப்கானிஸ்தான் கொடிகளை கைகளில் ஏந்தி பாக்டியா மாகாணத்தில் உள்ள எஃப் 9 பூங்காவில் கோஷம் எழுப்பினர். தகவல் கிடைத்ததை அடுத்து காவல்துறையினர் அங்கு சென்றனர். பல மாணவர்கள் அங்கிருந்து தப்பி சென்றனர். ஐந்து பேர் மட்டுமே கைது செய்யப்பட்டனர். அதில் ஒருவனிடம் இருந்து ஆப்கானிஸ்தான் குடிமக்கள் அட்டையை கைப்பற்றினர். எனினும் அவர்கள் மீது எந்த வழக்கையும் பதியாமல் சில மணி நேரங்களில் காவல்துறையினர் விடுவித்தனர். 20 ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற இந்த சம்பவம் தலிபான்களின் அடுத்த இலக்கு என்ன என்பதன் முன்னோட்டமாக அங்குக் கருதப்படுவதால் அந்நாட்டு அரசை இது கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளது.

விஜயபாரதம்





# சரியான தீர்ப்பு



விஜயபாரதம்

ஒருவரை நீண்ட நாட்களாக காணவில்லை. அவர் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று கருதிய போலீஸார், சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்து நிதிமன்றத்தில் நிறுத்தினர். வழக்கு விசாரணைக்கு வந்தது.

குற்றம் சாட்டப்பட்டவரின் வக்கீல் எழுந்து, "மைலார்ட்! இவர் யாரைக் கொலை செய்தார் என்று குற்றம் சாட்டப்பட்டதோ, அவரே இன்னும் ஐந்து நிமிடத்தில் இதே நீதிமன்றத்தின் கதவு வழியே உள்ளே வரப் போகிறார். நீங்கள் அதைப் பார்த்த பின்பு, இவர் குற்றமற்றவர் என்பதை உணர்வீர்கள்" என்று கூறி அமர்ந்துவிட்டார்.

நீதிபதி உட்பட எல்லோரும் நீதிமன்றக் கதவையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். 5 நிமிடம், 10 நிமிடம் கழிந்தது. ஒருவரும் வரவேயில்லை. இப்போது வழக்கறிஞர் எழுந்தார்.

"மைலார்ட்! நீங்கள் உட்பட யாருமே காணாமல் போனவர், கொலைதான் செய்யப்பட்டவர் என்பதை முழுமையாக நம்பவில்லை. அதனால்தான் எல்லோரும் வாசலையே பார்த்துக் கொண்டிருந்தீர்கள். எனவே, உங்களுக்கு இருக்கும் சந்தேகத்தின் பலனை குற்றம் சாட்டப்பட்டவருக்கு அளித்து, அவரை விடுதலை செய்ய வேண்டும்" என்று கூறிவிட்டு கம்பீரமாக அமர்ந்தார். பிற்பகலில் நீதிபதி தீர்ப்பை வாசித்தார். குற்றவாளிக்கு ஆயுள்தண்டனை அளித்தார். வக்கீல் எழுந்து, "எப்படி மைலார்ட்?" என்று கேட்டார்.

அதற்கு நீதிபதி சொன்னார், "அந்த பத்து நிமிடமும் நான் வாசலைப் பார்த்தது உண்மைதான். ஆனால், ஒருதடவை கூட குற்றம் சாட்டப்பட்டவர் வாசலைப் பார்க்கவில்லை."

# அழகு

ஒரு ராஜா அழகான குதிரை ஒன்று வளர்த்து வந்தார். அந்த குதிரைக்கு தான் இன்னும் அழகாகனும்னு ஆசை வந்து கடவுள்கிட்ட வேண்டிகிச்சு. கடவுள் குதிரையின் முன் தோன்றி உனக்கு என்ன வரம் வேண்டும் கேள் என்றார்.குதிரை நான் இன்னும் அழகாகனும் அதுனால என் கழுத்தை நீளமாகவும் கால்களை நீளமாகவும் படைக்க வேண்டும் என்று கேட்டது.

கடவுளும் குதிரை கேட்ட மாதிரி கழுத்தையும்,கால்களையும் நீளமாக படைத்தார்.குதிரை இப்போது ஒட்டகம் மாதிரி ஆகிவிட்டது.தன் உருவத்தை பார்த்த குதிரைக்கு அழுகை வந்து விட்டது.

அய்யோ கடவுளே என்னை பழைய மாதிரியே மாற்றிவிடுங்கள் என்று கேட்டது குதிரை.நீ விரும்பிய மாதிரி தான் உன்னை படைத்துள்ளேன்,பிறகு ஏன் வருத்தபடுகிறாய் என்று கேட்டார். ஒவ்வொருவரையும் ஒவ்வொரு விதமாக படைத்துள்ளேன்.உன்னால் தரையில் வேகமாக ஓட முடியும்,ஒட்டகத்தால் பாலைவனத்தில் விரைவாக ஓடமுடியும் அதிகமாக பொதி சுமக்க முடியும்.



விஜயபாரதம்

அழகு வேண்டும் என்று மேலும் மேலும் ஏதாவது செய்ய நினைத்தால் இப்படித்தான் போய் முடியும் என்றார்.

"அழகு என்பது உருவத்தில் அல்ல நீ செய்யும் செயலில்"

# வலையில் சிக்கிய மீம்கள்

துளியும் ரத்தம் சிந்தாமல் ஆப்கானை கைபற்றியது எப்படி?



உருட்டா இருந்தாலும் ஒரு நியாயம் வேணாமாடா

அசால்ட்டாக ஆப்கானை கைப்பற்றிய தாலிபான்கள்



அது சரி.. உங்க வாயி.. உங்க உருட்டு..

ஆக்கிரமிப்பிலும் பொறுப்பாக மாஸ்க் அணிந்த தாலிபான்கள்



இத்தாதண்டி உருட்டு...

பெண்கள் பர்தா அணியவும் கால் தெரியாமல் நடக்கவும் உரிமைகள் கொடுத்த தாலிபான்கள்.



உங்க உருட்டு க்யூட்டா இருக்கு

என்னய்யா.. ஒங்க தாலிபானுங்க... பெண்கள் கால் தெரியும்படி செருப்பு அணியக்கூடாதுனு உத்தரவு போட்ருக்காங்க.. இதை கண்டிக்க மாட்டியா??

Saravanavel



அவனுங்க எங்காளுகனு சும்மா மூடிக்கிட்டு இருக்கோம்... இதுவே இந்தியால எங்காவது குக்கிராமத்தில பெண்ணுரிமைக்கு பிரச்சினை வந்தாலும் உக்கிரமாகி இருப்போம்... தெருமுக்குல நின்னு.. மோடி ஒயிக.. இந்தியா ஒயிகனு கத்திபுட்டு ஓடியிருப்போம்...